உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்–05 | சுபகிருது வருடம் புரட்டாசித் திங்கள் செப்டம்பர் 2024 | பூமி–17



## மகத்துவங்கள் நிறைந்த புரட்டாதி மாதம்

புரட்டாதி மாதம் என்பது வழிபாட்டிற்குரிய சிறப்பு மாதம் ஆகும். நவராத்திரி என்று சொல்லப்படுகின்ற சிறப்பு வழிபாட்டில் ஒன்பது இரவுகள் அன்னை பராசக்தியை, துர்க்கை அம்பாளாக, மகாலட்சுமியாக, சரஸ்வதியாக போற்றி வழிபடுகின்ற புண்ணிய மாதம் இந்த புரட்டாதி மாதம். அதே வேளை மரங்களை நட்டு மழையை வரச்செய்து எதிர்காலத்தை வளப்படுத்துகிறது காலம் இது. இந்த புரட்டாதி மாதத்தில் வருகின்ற விஜயதசமியை எதிர்பார்த்து தங்களது புதிய தொழில்களை ஆரம்பித்து வைக்கும் புண்ணிய காலம் இது. இந்த மாதத்தில் திருமணம் போன்ற கருமங்களை செய்யாமல் மனங்களை வளப்படுத்தி புண்ணிய கருமங்களை நிறைவேற்றுகின்ற காலம் இது.

பெரியோர்களே, தாய்மார்களே, குழந்தைகளே இந்த புண்ணிய மாதத்திலே உங்கள் நிலங்களில் மரங்களை நடுவதற்கு ஆயத்தமாகுங்கள். நம் முன்னோர்கள் நட்டு வைத்து மரங்களில் இருந்து தான் இன்று நாங்கள் பயன்பெறுகின்றோம். இன்று நாங்கள் நிழல்களில் இருக்கும் மரங்கள் எல்லாம் எங்கள் முன்னோர்கள் நட்டு வைத்த மரங்கள் ஆகும். எனவே எங்களது அடுத்த தலைமுறைக்கு நாங்கள் மரங்களை நட்ட விட்டு செல்ல வேண்டும். எனவே இந்த மாதத்தில் மரங்களை நாங்கள் நட வேண்டும். தென்னை மரம் தன்னுடைய ஒவ்வொரு ஓலையினையும் இழக்கும் போது மரத்திலே தனது அடையாளத்தை விட்டுவிட்டுத்தான் போகிறது. மனிதர்கள் இன்று தங்கள் அடையாளங்களை இழந்து விட்டுப் போகிறார்கள். இந்தப் பிறவி எடுத்ததன்

பெறுமதியை தெரிந்து வாழ்நாளிலே ஏதாவது நல்ல கருமங்களை செய்ய வேண்டும். மனிதர்கள் நல்ல பணிகளை செய்ய வேண்டும், நல்ல தொண்டுகளை செய்ய வேண்டும். இந்தப் பணிகள் தான் எங்கள் எதிர்கால தலைமுறையினை வாழ வைக்கும்.

எங்கள் முன்னோர்கள் எவ்வளவு கஷ்டங்களை சுமந்து தான் பள்ளிக்கூடங்களை நமக்காக கட்டினார்கள். இன்று யாழ்ப்பாணத்தில் பெரிய பெரிய பாடசாலைகள் எல்லாம் ஒரு காலத்திலே படி அரிசி எடுத்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு பாடசாலைகளை வளாத்தெடுத்தார்கள். புகழ்பூத்த யாழ் இந்துக் கல்லூரி இந்த புரட்டாதி மாதத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது. இன்று இந்தப் பாடசாலை எத்தனையோ புத்திஜீவிகளை உருவாக்கிய இந்தப் பாடசாலை ஒரு காலத்திலே நாவலர் பெருமானின் வேண்டுகோளின் அடிப்படையில் பிடி அரிசித் திட்டத்தை உருவாக்கி, வீடுவீடாகச் சென்று அரிசி சேகரித்து கொஞ்சம் கொஞ்சமாக இந்தப் பாடசாலையை கட்டி முடித்தார்கள். இதைப் பார்த்துதான் பல கிராமங்களில் சுதேசிகளுக்கான பல பாடசாலைகளை கட்டினார்கள். நம் முன்னோர்கள் தாங்களே பாடசாலையை மெழுகி தாங்களே கூரை போட்டு கொஞ்சம் கொஞ்சமாக பாடசாலைகளை வளர்த்தார்கள். எங்கள் முன்னோர்கள் நாங்கள் மட்டுமல்ல அடுத்த தலைமுறையும் நன்றாக படித்து வாழ வேண்டும் என்று எண்ணி கஸ்ரப்பட்டு பாடசாலைகளை கட்டுவித்தார்கள்.

நாங்களும் எங்கள் எதிர்கால சந்ததியினருக்காக நல்ல பணிகளை செய்து விட்டுப் போக வேண்டும்.

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆலயம் பதினாயிரம் நாட்டல்,
பின்னருள்ள தருமங்கள் யாவும்,
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்,
அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர்
ஏழைக்கு எழுத்தறிவித்தல்“

என்ற பாரதியின் சிந்தனைக்கு அமைவாக, எங்கள் முன்னோர்கள் தர்ம சிந்தனையுடன் இந்த மண்ணிலே வாழ்ந்தார்கள். எங்களுக்கு எவ்வளவோ கருமங்களை நிறைவேற்றித் தந்துவிட்டுப் போயுள்ளார்கள். சோறு கொடுப்பது புண்ணியம் என்பது போல ஒரு ஏழைக்கு கல்வியறிவு புகட்டிவிட்டால் அது மிகப் பெரிய புண்ணியமாகும்.

அதனால்தான் நம் முன்னோர்கள் பல பாடசாலைகளை கட்டுவித்தார்கள். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியை தோற்றுவித்த பாவலர் துரையப்பா அவர்கள் கால் நடையாக பட்டினத்திற்கு போவாராம் கச்சேரியில் பாடசாலை அனுமதி எடுப்பதற்கு. அவர்கள் அனுமதி கொடுக்கவில்லை என்றால் மாலை வந்து பாட்டு எழுதுவாராம். பாவலர் துரையப்பாவின் பாக்கள் என்றே புத்தகங்கள் உள்ளன.


ஆசிரியர்
**கலாநிதி. செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன்**

உதவி ஆசிரியர்
**திரு. ச.சந்தோஷன்**

வடிவமைப்பாளர்
**திருமதி. ச. மதுஷா**


நாங்கள் படிக்க வேண்டும் என்பதற்காக எங்கள் முன்னோர்கள் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்துள்ளார்கள் என்பதை தற்காலத்தில் பலரும் அறிவதில்லை. எங்கள் முன்னோர்கள் எவ்வளவு பண்பாக வாழ்ந்தார்கள் என்றால் ஒருவருக்கு கடிதம் எழுதுவதென்றாலும், நாங்கள் நல்ல சுகம் நீங்களும் சுகமாக இருக்க இறைவனை வேண்டுகிறேன் என எழுதிவிட்டுத்தான் தாங்கள் கூற வந்த செய்தியை எழுதுவார்கள். மற்றவர்களின் மனங்களை நோகச் செய்யாத வார்த்தைகளை எங்கள் முன்னோர்கள் பயன்படுத்தினார்கள்.

ஆனால் தற்காலத்தில் ஒரு தாயின் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் காணிப் பங்கு சண்டை காரணமாக 25 ஆண்டுகள் ஒருவரை ஒருவர் கதைப்பதில்லை. நம் முன்னோர்கள் ஒரு குழந்தை பிறந்தவுடன் அறம் செய்ய விரும்பு என சொல்லி வளர்த்தார்கள் ஆறுவது சினம் என சொல்லிக் கொடுத்தார்கள். கோபம் என்பது பாவத்தின் அடையாளம் எனவே அதனை அடக்கப் பழக வேண்டும் என சொல்லிக் கொடுத்தார்கள். கோபத்தை வளர்ப்பவன் நரகத்தை சிருஷ்டி செய்வபன் என்று மகாபாரதத்தில் கண்ணன் கூறுகிறான். சினத்தை நிந்தனை செய்யும் முனிவர்கள் தொழ மகிழ்வோனே என முருகனைப் பார்த்து அருணகிரிநாதர் பாடுகின்றார். பகையும் கோபமும் பாவங்கள் ஆகும்.

எனவே நல்ல மனிதர்களுக்கு அடையாளங்கள் என்ன என்பதை எங்கள் முன்னோர்கள் சொல்லிவிட்டு போயுள்ளார்கள். கிடைத்த இந்த மானிடப் பிறப்பில் ஏதாவது தர்ம காரியங்கள் செய்து விட்டுப் போக வேண்டும். சிலா் அதிகாலை எழும்பும்போதே கொக்கத்தடியுடன் எழும்புகின்றார்கள் இன்று யாரை கொழுவி இழுக்காலம் என. பாவம் அவர்கள் அறியாமையில் வாழ்ந்து பாவங்களை தேடுகிறார்கள். எனவே இந்த புண்ணிய மாதத்திலே நல்ல கருமங்களை செய்ய வேண்டும்.

**கலாநிதி. செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன்**

# திருக்குறளுக்கு உரையெழுதிய முதலாவது பெண் உரையாசிரியரானார் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்.











தமிழின் அடையாளமாகக் கொள்ளப்படும் திருக்குறளுக்கு பல்வேறு உரையாசிரியர்களும் தத்தம் புரிதலுக்கேற்ப உரை வழங்கியுள்ளனர். பரிமேலழகர், மணக்குடவர், மு.வரதராசன், சாலமன் பாப்பையா என பிரபல உரையாசிரியர்களது உரைகள் இணைய வழியில் பெறக்கூடியதாக உள்ளன. பரிமேலழகர் உரைக்கு வை.மு.கோபாலகிருஸ்ணமாச்சாரியார், வடிவேலுச் செட்டியார் போன்ற பெரியோர்களது ஆராய்ச்சி உரைகளும் சிறப்பானவையாகப் போற்றப்படுகின்றன. எத்தனையோ உரையாசிரியர்கள் தோன்றினாலும் தற்காலத்திற்கேற்ற மொழி நடையில் உரைசெய்து புதுமை படைத்திருக்கிறார் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ். திருக்குறளுக்கு உரை செய்த முதலாவது பெண் அறிஞர் என்ற பெருமையையும் பெறுகின்றார். தமிழகத்தின் பிரபல பேச்சாளர் பாரதி பாஸ்கர் ஆங்கிலத்தில் திருக்குறளுக்கு உரை எழுதிக்கொண்டிருக்கிறார் என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்க செய்தி.

இலங்கையைப் பொறுத்த வரையில் பண்டிதர் வேலுப்பிள்ளை என்ற கோப்பாயைச் சேர்ந்த பெரியார் 1891 ஆம் ஆண்டு முப்பாநூற் சுருக்கம் என்ற நூலை வெளியீடு செய்தார். தேர்ந்தெடுக்கப்பட்ட சில அதிகராங்களுக்கு உரைநடையில் விளக்கம் எழுதி உள்ளார். இந்நூல் 2019 இல் வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் மீளவும் வெளியிடப்பட்டது. மீசாலையைச் சேர்ந்த தமிழறிஞர் அ.பொ. செல்லையா திராவிடக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு வாழ்ந்தவர். அவர் திருக்குறளுக்கு சுருக்க உரை எழுதி பின் கனடா சென்று வாழ்ந்த போது வெளியிட்டுள்ளார்.

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் கொவிட் கால முடக்கத்தைச் சரியாகப் பயன்படுத்தி திருக்குறள் முழுமைக்கும் உரை வகுத்துள்ளார். குறட்பா, செய்யுள் பிரிப்பு, சொல்லுக்குச் சொல் உரை (சொற்பொருள்உரை), பொழிப்புரை, குறிப்புரை என இந்த உரை அமைந்துள்ளது. யாழ்ப்பாணம் எவர்கிறீன் பதிப்பகத்தார் நூலை வடிவமைத்துள்ளனர். 1400 இற்கும் மேற்பட்ட பக்கங்கள் கொண்ட இந்த நூலிற்கு 5000 ரூபா விலை அச்சிடப்பட்டுள்ளது. 14.10.2023 இல் அகவை 80 இனை நிறைவு செய்த மனோன்மணி அம்மையாரின் 70 ஆவது நூல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# பக்திபூர்வமாக நிகழ்ந்த தெல்லிநகர் தேவியின் வருடாந்த மகோற்சவ பெருவிழா








இலங்கையில் உருவான முதலாவது துர்க்கையம்மன் ஆலயமாக திகழ்கின்ற தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா ஆவணி ஓணத்தை தீர்த்தோற்சவமாக கொண்டு 04.09.2024 அன்று கொடியேற்றத்திருவிழாவுடன் ஆரம்பமானது. இவ்வருடம் பங்குனி உத்திரத்தில் பிரமாண்டமான முறையில் ஆலயம் மீள உருவாக்கப்பட்டு கும்பாபிஷேகம் இடம்பெற்றது. அதன் பின் நிகழும் முதலாவது மகோற்சவத்தில் பெருமளவு பக்தர்கள் கலந்து கெண்டு அம்பாளை மெய்யுருக வழிபட்டார்கள்.























# மகிமைகள் நிறைந்த நவராத்திரியின் சிறப்புக்கள்



உலகெங்கும் பரந்து வாழும் இந்துக்களால் நவராத்திரி விழா மிக சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.புரட்டாசி மாதத்தை, எமனின் கோரை பல் என்று அக்னி புராணம் சொல்கிறது. எமனின் பாதிப்பில் இருந்து தப்பவே நவராத்திரி விழாவாக கொண்டாடப்படுகிறது. நவராத்திரி விழா எப்போது முதலில் கொண்டாடப்பட்டது என, கூற முடியாவிட்டாலும், இராமாயண காலத்திலேயே நவராத்திரி கொண்டாடப்பட்டுள்ளது. நவராத்திரி பூஜை செய்து தான், சீதை இருக்கும் இடத்தை அறிந்ததாக, தேவி பாகவதம் கூறுகிறது. அசையாப் பொருள் பரம்பொருள் என்றும், அசைவுடைய செயல் சக்தி என்றும் கூறப்படுகிறது. பொதுவாக சிவராத்திரி, கிருஷ்ண ஜெயந்தி, ராமநவமி போன்ற விழாக்கள் ஒருநாள் விசேஷமாகக் கொண்டாடப்படும். ஆனால் சக்தி வழிபாடு மட்டும் நவராத்திரி என்ற பெயரில் ஒன்பது நாள் விழாவாக கொண்டாடப்படுகிறது.

வருடத்தில் நான்கு நவராத்திரிகள் வருவதுண்டு. ஆனி மாத அமாவாசைக்குப் பின்னர் வருவது ஆஷாட நவராத்திரி. புரட்டாசி மாத அமாவாசைக்குப் பின்னர் வருவது மகா நவராத்திரி. தைமாத அமாவாசைக்குப் பின்னர் வருவது மாக நவராத்திரி. பங்குனி மாத அமாவாசைக்குப் பின் வருவது வசந்த நவராத்திரி. புரட்டாசி அமாவாசை நாளுக்குப்பின் ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுகிறது நவராத்திரி. நவராத்திரியின்போது ஒன்பது நாளும் ஒன்பது வகையில் மலர் வழிபாடு செய்வார்கள். கொலுவிருக்கும் தேவியரை ஒன்பது ராகங்களில் துதித்து, ஒன்பது வகைப் பழங்கள், பிரசாதங்கள் படைத்து அன்னையின் மனம் மகிழ்வுறச் செய்வார்கள். படைத்தல், காத்தல், அழித்தல் எனும் மூன்று சக்திகளைக் கொண்ட அன்னையின் அருள் வேண்டி பூஜை செய்தலே நவராத்திரி வழிபாடாகும்.

துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி என மூவகையாக மும்மூன்று நாட்கள் விழாக் கொண்டாடுவதும், இறுதியில் பத்தாம் நாள் அம்மனை சிம்ம வாகனத்தில் ஊர்வலமாகக் கொண்டு சென்று சூரனை வதம் செய்த நிகழ்ச்சியாக பாரிவேட்டையும் நடைபெறும். புரட்டாசி மாதத்தில் நவராத்திரி விழாவில் கொலு வைத்தல் பரம்பரையாகச் செயல்பட்டுவரும் பக்தி நிகழ்ச்சியாகும். நல்லோரின் நட்பை ஏற்றுப் போற்றுதலும் பக்தியைப் பெருகச் செய்வதும் கொலுவின் முக்கிய நோக்கமாக அமைகிறது. பிரதமை முதல் திரிதியை வரையில் கிரியா சக்தியாகிய துர்க்கா தேவியையும் சதுர்த்தி முதல் சஷ்டி வரையில் இச்சா சக்தியாகிய மகாலட்சுமியையும் சப்தமி முதல் நவமி வரையில் ஞான சக்தியாகிய சரஸ்வதியையும் வழிபாடு செய்து தசமியில் நவராத்திரியை நிறைவு செய்வது வழக்கம். மகேஸ்வரி, கவுமாரி, வராஹி, மகாலட்சுமி, வைஷ்ணவி, இந்திராணி, சரஸ்வதி, நரசிம்மி, சாமுண்டீஸ்வரி போன்ற தேவியரின் மந்திரங்களை ஒன்பது நாளும் சொல்லி, பூஜை செய்வது நலமாகும். ஒன்பது நாளும் விரதமிருந்து அன்னையை வழிபடும் கன்னிப் பெண்களுக்கு திருமணம் கைகூடும். குடும்பத்தில் அன்பும் ஒற்றுமையும் ஓங்கும். இளம் பெண்கள் கல்வி, இசை போன்றவற்றில் சிறப்படைவார்கள். இல்லத்தில் செல்வம் சேரும்.

நவராத்திரி காலத்தில் விடிய விடிய விளக்கு எரிவது வீட்டிற்கு செல்வ வளத்தை தரும். விளக்கில் இருக்கும் ஐந்து முகங்கள் அன்பு, மனஉறுதி, நிதானம், சமயோசிதம், சகிப்புத்தன்மை ஆகிய நற்பண்புகளும் பெண்களுக்கு அவசியம் என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளன. தரையில் விளக்கேற்றி வைக்கக்கூடாது. மரப்பலகையில் கோலமிட்டு, அதன் மேல் விளக்கு இருக்க வேண்டும். விளக்கிற்கு மலர் சூடுவது மிகநல்லது. தீபலட்சுமியாகப் போற்றப்படும் திருவிளக்கிற்கு சந்தனம், குங்குமம் இடுவது அவசியம். தீபலட்சுமியே! எங்கள் வீட்டில் எப்போதும் நிலைத்திருப்பாயாக! என்று சொல்லிக்கொண்டே விளக்கேற்ற வேண்டும்.அம்மன் கோயில்களில் மாவிளக்கு வழிபாடு செய்வது சிறப்பானது. உடல் ஆரோக்கியம் பெற செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் நேர்த்திக்கடனாக மாவிளக்கேற்றி வழிபடுவது வழக்கம். நாயன்மார்களில் நமிநந்தியடிகள், கணம்புல்லர், கலியநாயனார் ஆகியோர் விளக்கு வழிபாட்டினால் சிவன் அருளைப் பெற்றவர்கள். வேதாரண்யம் வேதபுரீஸ்வரர் கோயிலில் அணைய இருந்த விளக்கைத் தூண்டிய எலி மறுபிறவியில் மகாபலிச்சக்கரவர்த்தியாகப் பிறந்தது. விளக்கேற்ற எக்காலமும் உகந்தது பஞ்சுத்திரி. விழா நாட்களில் தாமரைத்தண்டுத்திரியால் விளக்கேற்ற முன்வினைப்பாவம் தீரும். எருக்கம் பட்டைத்திரியால் விளக்கேற்ற செல்வம் சேரும்.விளக்கை ஒருமுகம் ஏற்ற ஓரளவு பலனும், இரண்டுமுகம் ஏற்ற குடும்ப

ஒற்றுமையும், மூன்றுமுகம் ஏற்ற புத்திரபாக்கியமும், நான்குமுகம் ஏற்ற செல்வவளமும், ஐந்து முகம் ஏற்ற சகல சௌபாக்கியமும் உண்டாகும்.

கிழமைகளில் செவ்வாய், வெள்ளியும், திதிகளில் அமாவாசை, பவுர்ணமியும்,நட்சத்திரத்தில் கார்த்திகையும், பிரதோஷமும், தமிழ் மாதப்பிறப்பு நாளும் கோயில்களில் திருவிளக்கு பூஜை நடத்த உகந்தவை.கிழக்கு நோக்கி விளக்கேற்ற துன்பம் நீங்கும். மேற்கு நோக்கி ஏற்றுவதால் கடன்தொல்லை அகலும். வடக்கு நோக்கி ஏற்ற செல்வவளம் பெருகும். தெற்கு நோக்கி ஏற்றுவது கூடாது. நதிகளில் ஏற்றி வைக்கும் தீபத்தை ஜலதீபம் என்பர். காசியில் தினமும் மாலையில் ஜலதீபங்களை ஏற்றி கங்கைநதியை வழிபடுவது காண்போரை பரவசத்தில் ஆழ்த்தும். திருவிளக்குபூஜை நடத்துவது புண்ணியம் மிக்கதாகும். பலர் கூடி ஒரே மனதுடன் பூஜையில் கலந்து கொள்ளும்போது, யாகம் செய்வதற்கு ஈடானதாக ஆகிறது. கூட்டுப் பிரார்த்தனையானயால் இறையருளை எளிதாகப் பெற முடியும்.

இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி, ஆதி சக்தி, பராசக்தி, குடிலா சக்தி என ஆறு அம்சங்களையும் ஒருங்கே கொண்டு தேவி அருள்பாலிக்கும் தலங்கள் ஒன்பது. அவை காஞ்சி காமாட்சி, ஸ்ரீசைலம் பிரமராம்பாள் தேவி, கோல்ஹாப்பூர் மகாலக்ஷ்மி, உஜ்ஜயினி காளிகாதேவி, கயா மங்களாதேவி, அலகாபாத் அலோபிதேவி, உத்தரப்பிரதேசம் விந்தியவாசினி, நேபாளம் குஹ்யகேஸ்வரி, வாரணாசி விசாலாட்சி. சக்கரப்பள்ளி, அரிமங்கை, சூலமங்கலம், நந்தி மங்கலம், பசுபதிமங்கலம், தாழை மங்கலம், புள்ளமங்கலம் ஆகிய ஏழு ஊர்களையும் சப்தமங்கலத் தலங்கள் என்று கூறுவர். இத்தலங்களில் முறையே பிராமி, மகேஸ்வரி, கவுமாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டியாக அம்பிகை பூஜை செய்ததாகக் கூறுகின்றனர். ஒரு வருடம் கெடாத தேங்காய் நவராத்திரி சமயத்தில் நெமிலி திரிபுரசுந்தரி கோயிலில் கலசத்தில் வைக்கப்படும் தேங்காய் அடுத்த வருடம் வரை கெடாமலிருக்கும். அந்தத் தேங்காயை மறுவருட நவராத்திரியின்போது உடைத்து பக்தர்களுக்கு பிரசாதமாக விநியோகிக்கின்றனர்.

ஆண்டுக்கு இருமுறை நவராத்திரி கொண்டாடவேண்டும் என்று தேவி புராணம் கூறுகிறது. சித்திரையில் வரும் நவராத்திரிக்கு வசந்த நவராத்திரி என்றும், புரட்டாசியில் வரும் நவராத்திரிக்கு சாரதா நவராத்திரிஎன்றும் பெயர்.இவ்விரு காலங்களும் எமனுடைய கோரைப்பற்களுக்குச் சமமாகும். கோடை, குளிர் என பருவகாலம் மாறும்போது நோய்நொடிகள் பரவும். இந்த ஆபத்திலிருந்து மக்களைக் காக்கும்படி தேவியைப் பூஜிக்கவேண்டும் என்பதால் இவ்விழாவை நடத்தினர். ஆனால், கோடையில் நடந்த சித்திரை நவராத்திரி காலப்போக்கில் மறைந்து விட்டது. புரட்டாசி சாரதா நவராத்திரியே இப்போது வழக்கத்தில் உள்ளது. நவராத்திரி அம்பாளுக்கு மிகவும் விருப்பமான பண்டிகை. பகலும், இரவுமாக ஒன்பது நாட்கள் பூஜை செய்வது நவராத்திரி விரதம். ஆண்டுக்கு நான்குமுறை நவராத்திரி வந்தாலும் புரட்டாசி அமாவாசைக்குப் பின் வரும் சாரதா நவராத்திரியைத்தான் இமயம் முதல் குமரி வரை கொண்டாடுகிறார்கள். நவராத்திரி கொண்டாடுவதில் குடும்பத்தில் பெரியவர் முதல் சின்னஞ்சிறுவர்கள் வரை அனைவர் பங்கும் உண்டு. இதனால் ஒற்றுமை, மரியாதை, பக்தி உணர்வு அதிகமாகும். கலைத்திறன், கற்பனைத்திறன், பொறுமை, சுறுசுறுப்பு, கைவேலைத்திறன், பாட்டு, நடனத் திறன்களும் வெளிப்படும். நிவேதனப் பொருட்கள் விதம் விதமாய் செய்வதால் சமையல் கலை போற்றப்படுகிறது. விதவிதமான வேடங்கள் போடும்போது ஒப்பனைத்திறன் ஒளிர்கிறது. இவை அனைத்தினாலும் மன மகிழ்ச்சியும், பாராட்டும் கிடைக்கும். பூஜை மகிமையால் மனை சிறக்கும் மகாசக்தி அருளால் மங்களம் பெருகும் நினைத்தது நிறைவேறும். எனவே தான் நவராத்திரி சுபராத்திரி எனப்படுகிறது. நவராத்திரி பூஜையை தெய்வங்களும், தேவர்களும்கூட செய்து பலன் பெற்றுள்ளனர். நாரதர் அறிவுரைப்படி ராமர் கடைப்பிடித்து ராவணனை அழித்து சீதையை மீட்டு வந்தார். கண்ணபிரான், சியமந்தக மணி காரணமாக





அடைந்த அபவாதம் இப்பூஜை செய்ததால் நீங்கியது. பஞ்சபாண்டவர்கள் பாரதப் போரில் வென்றதும் இந்த பூஜை செய்ததால்தான்.

தீய சக்தி மேலோங்கும்போது காத்திட வேண்டினால் அம்பாள் சண்டிகையாக ஒன்பது கோடி வடிவங்கள் எடுத்து தீமையை அழித்து நன்மை செய்வாள் என தேவி மகாத்மியம் கூறுகிறது. நவராத்திரியில் 9 நாட்களும் பூஜை விரதம் அனுஷ்டிக்க வேண்டும். இயலாதவர்கள் அஷ்டமி நாளில் மட்டுமாவது விரதம் இருந்து பூஜை செய்யலாம். விஜயதசமி தினத்தில் அம்பிகை அசுரர்களை அழித்து வெற்றிவாகை சூடினாள். ஆணவம் - சக்தியாலும், வறுமை-செல்வத்தினாலும், அறியாமை-ஞானத்தினாலும் வெற்றி கொள்ளப்பட்ட தினம் என்பதால் வீரம், செல்வம், கல்விக்கு உரிய தேவியரான துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி என முப்பெரும் தேவியர்க்கும் உரியதாக இதை சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். அன்றைய தினம் புதிதாகத் தொடங்கும் எல்லாக் காரியங்களும் எளிதாக வசமாகும் என்பது ஐதீகம். அன்று அபிராமி அந்தாதியினைப் படிப்பது மிகச் சிறந்த பலன் தரும். நவராத்திரி நாட்களில் அம்பிகையை வெவ்வேறு வடிவங்களில் அலங்கரித்து வழிபடுவர். அம்பிகையை முதல் மூன்று நாட்கள் துர்க்கையாகவும், அடுத்த மூன்று நாட்கள் லட்சுமியின் அம்சமாகவும், கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதியாகவும் முப்பெரும் சக்தியரை வழிபடுவார்கள்.

நவராத்திரிப் பெருவிழாவின் ஒன்பதாம் நாள் மகாநவமி என்று தொழில்களையும், கல்வியையும், கலைகளையும் போற்றும் விதமாகவும், அதற்கடுத்த நாள் விஜயதசமி என்று வெற்றித் திருநாளாகவும் உலகெங்கும் உள்ள இந்துக்கள் மிகத் தொன்மைக் காலம் தொட்டுக் கொண்டாடி வருகின்றோம். இத் திருநாளில் (வித்தியாரம்பம் செய்தல் ) ஏடு தொடங்குதல், புதிய வியாபார நிலையம் ஆரம்பித்தல், புதிய தொழில் ஸ்தாபனங்கள் ஆரம்பித்தல் போன்றன ஆரம்பித்தல் வெற்றியும் புகழும் கிடைக்கும் என்பது ஐதீகம். மகிஷாசுரன், சண்டமுண்டர்கள், சும்ப நிசும்பர்கள் ஆகிய கொடிய அரக்கர்களை அன்னை பராசக்தி அழித்து வெற்றி கொண்ட திருநாள். தீமையின் உருவான ராவணனை ஸ்ரீராமன் போரில் வென்ற திருநாள். பாண்டவர்கள் தர்மத்தின் வெற்றிக்காக தங்கள் ஆயுதங்களையும், அன்னை துர்க்கையும் வழிபட்ட நன்னாள்.

புரட்டாசி அமாவாசை அன்றிருந்தே சிற்றின்ப வாழ்கையைத் தவிர்த்து, உணவை அளவோடு நிறுத்தி, விரதம் பூண்டு தேவி மீது பக்தி சிரத்தையுடன் நவராத்திரி வழிபாட்டைத் தொடக்க வேண்டும். விரதம் கைக்கொள்ளுவோர் (அனுஷ்டிப்போர்) அமாவாசையில் ஒரு வேளை உணவு உண்டு பிரதமை தொடக்கம் பகல் உணவின்றி இரவு பூசை முடிந்தபின் பால் பழம் அல்லது பலகாரம் உண்பது நல்லது. ஒன்பதாம் நாளாகிய மகாநவமி அன்று உபவாசம் (பட்டினியாய்) இருந்து மறுநாள் விஜயதசமியன்று காலை ஒன்பது மணிக்கு முன் பாரணை செய்தல் வேண்டும். இயலாதவர்கள் முதல் எட்டு நாளும் பகல் ஒருவேளை உணவருந்தி ஒன்பதாம் நாள் பால் பழம் மட்டும் உட்கொள்ளலாம். விஜயதசமி அன்று காலையில் சுவையுள்ள உணவுப்பதார்த்தங்கள் தயார் செய்து சக்திக்கு நிவேதித்து நவமியில் வைத்துள்ள புத்தகம் இசைக்கருவிகளைப் பராயணம் செய்து குடும்ப அங்கத்தவர்களுடன் பாரணையைப் பூர்த்தி செய்யலாம். நவராத்திரியில் கொலு வைப்பது வழக்கம். அமாவாசை அன்றே படிக்கட்டுக்கள் வைத்து பொம்மைகளை வைக்க வேண்டும் என்பதும், விஜயதசமியன்று ஒன்றிரண்டு பொம்மைகளைப் படுக்க வைத்துவிட்டுப் பின்னர் கலைக்க வேண்டும் என்பதும் சாஸ்திரம். தேவியரை வணங்குவதால் எதையும் பெறலாம்.



# உலக சாதனை படைத்த மட்டக்களப்பு தமிழ்ச்சிறுமி




ஐந்து வயது பாடசாலை மாணவி தனது அசாதாரணமான மனக்கணிதத் தேர்வினால் கணிதத்தில் சர்வதேச கீர்த் தியைப் பெற்றுள்ளார். காவியஸ்ரீ 6 நிமிடம் 50 விநாடிகளில் 200 கூட்டல் மற்றும் கழித்தல் கணக்குகளை தீர்த்தும் சோழன் உலக சாதனையைப் படைத்துள்ளார். மூன்று வரிகளை கொண்டு 50 கணக் குகள், நான்கு வரிகளை கொண்ட 50 கணக் குகள், 5 வரிகளை கொண்ட 50 கணக்குகள் மற்றும் 6 வரிகளை கொண்ட 50 கணக் குகள் இதில் கூட்டலும் மற்றும் கழித்தலும் கலந்து காணப்படும் மொத்தம் 200 கணக் குகளுக்கு அபகஸ் மற்றும் மனக்கணிதப் பயிற்சியின் ஊடாக எட்டு நிமிடங்களில் எழுத்தில் பதிலளிக்கவேண்டும் என்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட உலக சாத னையின் இலக்கு.

ஆனால் சிறுமி காவியஸ்ரீ 8 நிமிடங்களில் முடிக்கவேண்டிய உலக சாதனையை 6 நிமிடங்கள் 50 விநாடிகளில் சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் நீதிபதிகள் சோதித்த கணித கேள்விகளுக்கு சரியாக தீர்த்து உலக சாதனையை நிறுவினார். காவியஸ்ரீ மட்டக்களப்பு மாவட்டத்தில மைந்துள்ள ஈஸ்டன் இன்டர்நெஷனல் கல்லூரியில் முதல் வகுப்பு மாணவியாக கற்றுக்கொண்டிருக்கிறார். காவியஸ்ரீ 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி பிறந்தவர். இவரது தந்தை கணினி பொறியியலாளர் முருகேசன் பிள்ளை சுப்பிரமணியம், தாயார் மருத்துவர் ஹிசாந் தினி சுப்பிரமணியம் தம்பதிகளின் ஒரே புதல்வியாவார்.

# பவளவிழா காணும் சந்நிதி மோகன்தாஸ் சுவாமிகள்

சந்நிதியில் சந்நிதியான் ஆச்சிரமம் அமைத்து பசிப்பிணி போக்கும் நித்திய அன்னதானப்பணியை கடந்த 30 வருடங்களுக்கு மேலாக செம்மையுற செயற்படுத்துவதோடு நாடளாவிய ரீதியாக பல சமூக, சமய , அறப்பணிகளை செவ்வனவே ஆற்றும் கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகள் நன ( 31.08.2024 ) தனது பவள விழாவினை கொண்டாடினார். அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு இன்னும் பல்லாண்டு காலம் இந்த உன்னதப் பணிகளை ஆற்ற அவருக்கு வேண்டிய பலத்தை எல்லாம் வல்ல இறைவன் அளிக்க பிரார்த்திக்கிறோம்.



# சிறப்பாக முடிவடைந்த நல்லூர் மகோற்சவம்

























உலகப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த திருவிழா வெள்ளிக்கிழமை 09.08.2024 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 02.09.2024 கொடியிறக்கத்துடன் இனிதே நிறைவடைந்தது. பெருமளவு பக்தர்கள் கலந்து கொண்ட திருவிழாக்களால் நல்லையம்பதி எங்கள் மக்கள் வெள்ளமாக காட்சி அளித்தது. பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் கூறிய "யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம்" என்பதை மெய்ப்பிக்கும் காட்சிகளாக இவை அரங்கேறின.







# கின்னஸ் சாதனைப் படைத்த யாழ் மாணவி!



யாழ்ப்பாணம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் க.பொ.த சாதாரண தரம் பயிலும் மாணவியான மாதங்கி கனகசுந்தரம் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார். வேகமாக அதிக எண்ணிக்கையான பாதணிகளை அடுக்குதல் என்னும் தலைப்பின் கீழான போட்டியிலேயே இந்த சாதனையை படைத்துள்ளார்.




இணையத்தளம் ஊடாக விண்ணப்பித்து 10 பாதணிகளை ஒன்றன் மேல் ஒன்றாக 59 செக்கன்களில் அடுக்கி குறித்த சாதனையை புரிந்துள்ளார். கடந்த மே மாதம் 20ஆம் திகதி கொடிகாமத்தில் உள்ள வீட்டில் இரு சாட்சிகள் முன்னிலையில் கின்னஸ் உலக சாதனை சட்டதிட்டங்களுக்கு அமைவாக குறித்த சாதனை நிகழ்வு காணொளியாக பதிவு செய்யப்பட்டு இணையத்தினுடாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

மூன்று மாதங்களின் பின் ஜழசடன பரஙைநௌள யளளநளஅநவெ உழஅஅவைல மூலம் இதன் உண்மைத்தன்மை ஆராயப்பட்டு 28.8.2024 அன்று நிகழ்வு கின்னஸ் சாதனையாக அங்கீகரிக்கப்பட்டு அதற்கான சான்றிதழ் குறித்த மாணவிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வித்தியாலயத்திற்கு புதிய பெயர்ப்பலகை

ஈழத்தமிழர் மத்தியில் பெண் பேச்சாளராக இருந்து தமிழையும் சைவத்தையும் வளர்த்த பெருந்தகை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நினைவாக மல்லாகத்தில் உள்ள பாடசாலைக்கு அவர் திருநாமம் சூட்டப்பட்டிருந்தது. பழுதடைந்திருந்த பழைய பெயர்ப்பலகை மாற்றப்பட்டு மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வித்தியாலயத்தின் புதிய பெயர்ப்பலகை செஞ்சொற்செல்வரால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டிருந்தது.







# சிறப்பாக நடைபெற்ற முத்தமிழ் முருகன் மாநாடு



கலைநிகழ்ச்சிகளுடன் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு 24.08.2024 ஆரம்பமானது. இதில் உலகம் முழுவதும் இருந்து பக்தர்கள் பங்கேற்றுள்ளனர். ஈழத்தில் இருந்து சிறப்பு பேச்சாளராக கலாநிதி. செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

அரங்கங்களின் முன்பு “மலைபோன்ற செட்“ அமைக்கப்பட்டது. இந்த செட்டின் மேற்பகுதியில் முருகன், சிவன்-பார்வதி இருப்பது போன்ற நுழைவு வாயில் உள்ளது. இதன் அருகிலேயே, 100 அடி உயரத்தில் மாநாட்டு கொடி ஏற்றப்பட்டது.



மாநாட்டுக்காக 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அமரும் வகையில் பிரமாண்ட அரங்கம் அமைக்கப்பட்டது. மாநாட்டுக்கு வரும் பொதுமக்கள், பக்தர்கள் கண்டு களிக்கும் வகையில் முருகனின் சிறப்புகள் குறித்த கண்காட்சி அரங்கங்களும் அமைக்கப்பட்டு இருந்தன. மாநாட்டுக்கு வரும் பங்கேற்பாளர்கள், முக்கிய பிரமுகர்கள், பொதுமக்களுக்கு தனித்தனியாக அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

மாநாட்டுக்கு வரும் பக்தர்களுக்கு முருகனின் ராஜஅலங்கார படம், திருநீறு, குங்குமம், பஞ்சாமிர்தம், கந்தசஷ்டி புத்தகம், லட்டு, முறுக்கு உள்ளிட்டவை அடங்கிய பிரசாத பைகள் வழங்கப்பட்டன. இந்த மாநாட்டில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்தும் சுமார் 4 லட்சம் பேர் கலந்து கொண்டார்கள்.






# பயன்மிகு சுற்றுலா சென்ற கண்டி கலகா மாணவர்கள்



மலையகத் தமிழர்கள் படும் இன்னல்களுக்கு ஓரளவேனும் ஆறுதல் ஏற்படுத்தும் முகமாக அபயம் அறக்கட்டளையின் உதவியுடன் சிவபூமி தனது சேவைகளை மலையகத்தில் ஏற்படுத்தியது. அந்த வகையில் கண்டி கலஹா சிவபூமி ஆச்சிரமத்தில் நடைபெறும் இலவச வகுப்புகளில் பங்குபற்றும் மாணவர்கள் பலர் கல்வியில் முன்னேற்றமடைந்துள்ளனர். இவர்கள் லண்டன் அபயம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் சுற்றுலா சென்றனர். வெளி உலகிற்கு இந்த மாணவர்களை அழைத்துச் சென்றமையை மலையக ஆசிரியர்கள் வரவேற்றார்கள். மாணவர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள்.





# சிறப்பாக நடைபெறும் திருக்குறள் வளாகத்தின் திருப்பணி வேலைகள்







சிவபூமி அறக்கட்டளையினால் திருவாசகப் பாடல்கள் யாவும் கருங்கல்லில் பதிக்கப்பட்டு நாவற்குழி திருவாசக அரண்மனையிலும் திருமந்திரத்தின் மூவாயிரம் பாடல்களும் கருங்கல்லில் பதிக்கப்பட்டு மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை திருமந்திர அரண்மனையிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ்ப்பாடல்களை காலம் உள்ளவரை நிலைக்குமாறு கருங்கல்லில் பதிப்பிக்கும் புண்ணிய கருமத்தை அன்பர்கள் உதவியுடன் சிவபூமி வடக்குக் கிழக்கில் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இந்த பெரும்பணியின் அடுத்த கட்டமாக உலகப்பொது மறை என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட திருக்குறளின் அனைத்து குறட்பாக்களும் கருங்கல்லில் பதிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படுவதற்கான திருக்குறள் வளாகத்தின் கட்டுமாணப்பணிகள் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் அருகாமையில் மிக வேகமாக நடைபெற்று வருகிறது.

# சிவபூமியில் நிகழ்ந்த அமரத்துவமடைந்த முதியவர்களுக்கான பிதிர்க்கடன் கிரியைகள்



”முன்னோர்களைப் போற்ற முன்னேற்றங்கள் வரும்” என்பது முதுமொழி. அந்த முன்னோர்களை மனதில் நினைத்து, வழிபடுவதின் மூலம், பித்ருக்களுக்கு திதி கொடுப்பதன் மூலமும் நாமும், நமது சந்ததியும் அமைதியான வாழ்க்கை வாழமுடியும். அதை சில காரணங்களால் மறந்தோ செய்ய முடியாமற் போனாலோ, மகாளய பட்சத்தில் அதை செய்யலாம்.

மகாளயம் என்றால் கூட்டமாக வருதல் என்று பொருள். பட்சம் என்றால் 15 நாட்கள் என்று பொருள். புரட்டாசி வளர்பிறை பிரதமையிலிருந்து, அமாவாசை வரையிலான 15 நாட்கள், முன்னோர்கள், பிதுர் லோகத்தில் இருந்து வந்து, இங்கு, பூமியில் தங்குவார்கள். இந்த நாட்களே மகாளய பட்சம் எனப்படும். இக்காலக் கட்டங்களில் ஜாதி, மத வேறுபாடின்றி, முன்னோர் ஆத்மா சாந்தி அடைய, தம்மால் இயன்ற முன்னோர் வழிபாட்டைச் செய்தல் வேண்டும்.

பாவங்களில் பெரிய பாவம் பித்ருக்களின் கர்மாவை நிறைவேற்றாமல் இருப்பதுதான் என்பது நம் முன்னோர்கள் வகுத்துக் கொடுத்த வழி. முன்னோர் ஆத்மா சாந்தி அடைய, மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இக்கடமையைச் செய்தல் வேண்டும் என்பார்கள். ஆத்மா சாந்தி அடைய உதவுவது என்பது மிகப் பெரிய விஷயம்.

இந்த காலத்தில் முன்னோர் வழிபாடு செய்தால், பாவ விமோசனம் பெறலாம் என்பதும் ஐதீகம். தத்தம் வாரிசுகளின் உதவியின்றி ஆத்மா சாந்தி அடைவது அத்தனை எளிதல்ல என்பர். முறையான முன்னோர்களுக்கான வழிபாடு, இறந்தவர்களின் ஆத்மாவை பிறவா நிலைக்கு எடுத்துச் செல்லும். ஒரு ஆத்மாவை சாந்தியடையச் செய்பவர் அதற்கான புண்ணிய பலனைத் பெறுவர். இதை தொடர்ந்து செய்பவர்கள், சிரமங்கள் இன்றி, தமது வாழ்க்கைப் பாதையை, நிர்ணயித்துக் கொண்டு மகிழ்வுடன் செல்லலாம்.

மகாளயத்தில் பித்ருக்கள் என்பவர்க்கு பசி, தாகம் அதிகம் இருக்கும். அதைப் போக்க, கருப்பு எள் கலந்த தண்ணீரை தர்ப்பணம் செய்ய வேண்டும் என சாஸ்த்திரங்கள் கூறும். தர்ப்பணம் என்றால், ”திருப்திப்படுத்துதல்” என பொருள். அந்த சடங்கில், தர்ப்பையின் மேல் விடும் எள்ளும், அரிசியும், நீரும், அவர்கள் பல நாட்கள் உட் கொள்ளக்கூடிய நல்ல ஒரு உணவாகும். ஆகவே அந்த தர்ப்பணத்தைச் செய்து, அவர்களின் தாகத்தைத் தீர்ப்பது நம் கடமை.

அந்த வகையில் சிவபூமி முதியோர் இல்லம் ஆரம்பிக்கப்பட்ட முதல் இதுவரையில் அங்கு அமரத்துவமடைந்த 69 முதியோர்களின் நினைவாக புரட்டாதி மாத மாஹளயம் 19.09.2024 அன்று சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களால் கொடுக்கப்பட்டது. ஒவ்வொருவர் நினைவாகவும் தனித்தனி தானம் அந்தணருக்கு வழங்கப்பட்டு பிரார்த்தனை செய்யப்பட்டது.







# அர்ஜுனனின் வெற்றியின் இரகசியம்



சூதாட்டத்தில் தோற்ற பாண்டவர்கள் , தங்கள் அனைத்துச் செல்வங்களையும் துரியோதனனிடம் பறி கொடுத்தார்கள். அப்போது கர்ணனை அழைத்த துரியோதனன், "கர்ணா! இனி இவர்களின் அனைத்துச் சொத்துக்களும் நமக்கே சொந்தம். அக்னி பகவானின் பரிசாக அர்ஜுனன் பெற்ற காண்டீவ வில்லை இனி நீ எடுத்துக் கொள்!" என்றான்*. ஆனால் கர்ணனோ காண்டீவத்தை வாங்க மறுத்து விட்டான். "நான் எனது வலிமையிலும் திறமையிலும் நம்பிக்கை வைத்திருக்கிறேன். அவற்றைக் கொண்டு அர்ஜுனனை வெல்வேன். தேவர்களின் அருளால் கிட்டிய இந்த வில் எனக்குத் தேவையில்லை!" என்று சொன்னான் கர்ணன். "ஆஹா ! நீ அல்லவோ சுத்த வீரன்! அர்ஜுனன் காண்டீவத்தை நம்புகிறான். நீ உன் திறமையை நம்புகிறாய் !" என்று கர்ணனைத் துரியோதனன் பாராட்டினான். அர்ஜுனன் வனவாச காலத்தில் இந்தச் சம்பவத்தை வியாசரிடம் சொல்லி மிகவும் வருந்தினான். இதைக் கேட்டுச் சிரித்த வியாசர், "கர்ணன் காண்டீவத்தை வாங்க மறுத்ததற்கு வேறு காரணம் உள்ளது! அதை அவன் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை !" என்றார். "அது என்ன ?! " என்று கேட்டான் அர்ஜுனன்*. "நேரம் வரும் போது சொல்கிறேன் !" என்றார் வியாசர்.

பல ஆண்டுகள் கழிந்தன. மகாபாரத யுத்தம் முடிந்து, தர்மபுத்திரர் முடிசூடிய பின், கண்ணனைச் சந்திக்க அர்ஜுனன் துவாரகைக்குச் சென்றான். "அர்ஜுனா ! நான் எனது அவதாரத்தை முடித்துக் கொண்டு வைகுண்டம் செல்லவுள்ளேன். அதனால் எனது அரண்மனையிலுள்ள பெண்களை எல்லாம் நீ பாதுகாப்பாக அழைத்துக் கொண்டு இந்திரப்ரஸ்தத்துக்குச் சென்று விடு!" என்று கூறினான் கண்ணன். கனத்த மனத்துடன் கண்ணனிடமிருந்து விடை பெற்ற அர்ஜுனன் , தனது தேரில் பெண்களை அழைத்துக் கொண்டு சென்றான். வழியில் சில கொள்ளையர்கள் தேரை நிறுத்தி அர்ஜுனனைத் தாக்கினார்கள். அவர்களைப் பதிலுக்குத் தாக்குவதற்காகக் காண்டீவத்தை எடுக்க முற்பட்டான் அர்ஜுனன். ஆனால் அவனால் காண்டீவத்தைத் தூக்க முடியவில்லை. பற்பல பேரரசர்களை வீழ்த்தியவனும், யாராலும் வீழ்த்த முடியாதவன் என்று போற்றப்படுபவனும், வில் விஜயன் எனப் பெயர் பெற்றவனுமாகிய அர்ஜுனனை அந்தச் சாதாரணத் திருடர்கள் வீழ்த்தி விட்டார்கள். தன் வாழ்வில் முதன் முறையாகத் தோல்வியைச் சந்தித்தான் அர்ஜுனன். அதுவும் வெறும் சாதாரணத் திருடர்களிடம்.



வெட்கத்தால் தலை குனிந்த நிலையில், இந்திரப்ரஸ்தத்துக்கு நடந்தான் அர்ஜுனன். அப்போது அவன் எதிரில் வந்தார் வேத வியாசர். "அர்ஜுனா ! நீயும் உன் சகோதரர்களும் பூமியில் இருந்து புறப்படுவதற்கான காலம் வந்து விட்டது. இப்போது நடந்த சம்பவம் அதை நினைவூட்டவே ஏற்பட்டது !" என்று கூறினார் வியாசர். கண்ணனே புறப்பட்ட பின், நாங்கள் பூமியில் இருந்து என்ன செய்யப் போகிறோம். நாங்களும் புறப்படத் தயார். ஆனால், என் மனதில் பெரும் ஐயம் எழுந்துள்ளது. இது வரை நான் காண்டீவத்தைப் பொம்மை போலக் கருதி அனாயாசமாகக் கையில் ஏந்தினேன். ஆனால் இப்போது அது மலை போல் கனமாக உள்ளது. என்னால் அதைத் தூக்க முடியவில்லையே ! என்ன காரணம்?" என்று கேட்டான்

அர்ஜுனன். அதற்கு வியாசர் , "உன்னால் இந்தக் காண்டீவத்தை நிச்சயமாகத் தூக்க முடியாது. கண்ணன் உன்னுடன் இருந்தவரை இந்தக் காண்டீவத்தை ஏந்துவதற்கான பலத்தை அவன் உனக்கு அளித்தான். அவனது அருளால் தான் நீ காண்டீவத்தைப் பொம்மை போலத் தாங்கினாய். இப்போது அவன் பூமியை விட்டுச் சென்று விட்டதால், இதை உன்னால் தூக்க முடியவில்லை!" என்றார். மேலும் , " சூதாட்டத்தில் நீ காண்டீவத்தை இழந்த போது, அதைக் கர்ணன் வாங்க மறுத்தானே, ஏன் தெரியுமா? கண்ணனின் அருள் பெற்ற நீ காண்டீவத்தைத் தூக்கி விட்டாய். ஆனால் கண்ணனின் அருள் பெறாத கர்ணனால் இந்தக் காண்டீவத்தை அசைக்கக் கூட இயலாது. இது கர்ணனுக்கும் நன்றாகத் தெரியும். அந்தக் காரணத்தை வெளியே சொல்ல விரும்பாத கர்ணன், கௌரவமாகத் தான் சுத்த வீரன் என்றும் இந்த வில்லை நம்பித் தான் இல்லை என்றும் கூறிச் சமாளித்து , காண்டீவம் தனக்கு வேண்டாம் என்று கூறினான் !" என்றார் வியாசர்.

இதிலிருந்து பலசாலிகள் என்று போற்றப்படுபவர்களுக்கும் கூட , அந்த பலத்தை இறைவன் தான் வழங்குகிறார் என்பதை நாம் உணர முடிகிறது.

# ஆத்ம சாந்தி பிரார்த்தனை



வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தானம், பொன்னாலை வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம் ஆகிய தேவஸ்தானங்களினதும் பரிபாலன சபையின் ஆயுட்கால தலைவர் தர்மகர்த்தா சி.கைலைநாதன் ஐயா அவர்கள் 07.09.2024 சனிக்கிழமை விநாயகர் சதுர்த்தி நன்னாளில் இறைபதம் அடைந்துவிட்டார்.

வழக்கம்பரை முத்துமாரியம்மன் பொன்னாலை வரதராஜப்பெருமான் ஆலயம் என்று இரண்டு வரலாற்றுப்பிரசித்தி பெற்ற அற்புதங்கள் நிறைந்த தலங்களை இரு கண்கள் போல ஒருசேர பரிபாலனம் செய்து பெருங்கோவிலாக மிளிரங்கண்டு கும்பாபிசேகப் பெருவிழாக்கண்டு மகோற்சவப் பெருந்திருவிழாக்களை சிறப்பாக சிவமார்க்கமாக நடாத்தி மண்ணில் மான்புற மகிழ்ந்தவர். அன்னாரின் ஆத்மா இறைவனின் திருவடிகளில் சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

# பாராளுமன்ற மாதிரி விவாதத்தில் சாம்பியனான யாழ் இந்து

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு 14.09.2024 கொழும்பு பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான பாராளுமன்ற மாதிரி விவாதச் சுற்றுப்போட்டியில் அரையிறுதியில் கொழும்பு றோயல் கல்லூரியையும், இறுதிப்போட்டியில் கொழும்பு இந்துக் கல்லூரியையும் எதிர்கொண்டு வெற்றியைச் சுவீகரித்தது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.



# மங்களமாக நடந்த மாயவனின் மகோற்சவம்










வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வடமராட்சி வல்லிபுரம் ஆழ்வார் திருக்கோயிலின் வருடாந்த மகோற்சவம் கடந்த 02.09.2024 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மிகச்சிறப்பாக நடைபெற்றது. பெருமளவு பக்தர்கள் ஈழத்திருநாட்டின் நான்கு திசையிலும் இருந்து வருகை தந்து கோவிந்தனின் கோல அழகைக் கண்டு மெய்யுருக வழிபட்டார்கள்.




















# சிவபூமியில் நடைபெற்ற ஆவணி சதுர்த்தி சிறப்பு வழிபாடுகள்









சைவத் தமிழர்களுக்கு சதுர்த்தி முக்கியமான திதி. விநாயகப் பெருமானை நோக்கி விரதம் இருக்கும் புண்ணிய நாள். அதிலும் ஆவணி மாத விநாயகர் சதுர்த்தி விரதம் என்பது விநாயகப் பெருமான் அவதரித்த நாளாக கொண்டாடப்படுவதோடு விரதத்திற்குரிய உன்னத நாளாக உள்ளது.

அந்தவகையில் சிவபூமி சுழிபுரம் முதியோர் இல்லத்தில் ஆவணி பிள்ளையார் சதுர்த்தி விரத சிறப்பு வழிபாடுகள் முதியோர்களுடன் இணைந்து சிறப்பாக நடைபெற்றது. முதியவர்கள் பக்திபூர்வமாக விநாயகப் பெருமானை வழிபட்டார்கள்.

அதே போல் சிவபூமி குப்பிளான் ஆச்சிரமம் மற்றும் கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை என்பவற்றில் பிள்ளையார் சதுர்த்தி சிறப்பு வழிபாடுகள் பக்திபூர்வமாக இடம்பெற்று அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.





இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.(புரட்டாசி 2024) ISBN-978-955-7420-00-4